சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

<u>எ.சா.2 அன்பு த /பெ நாராயணன் , வயது.40</u>

**<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.-</u>**

1. நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பனை வந்தது என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார்கள் என்ற காரணம் அழைப்பானையில் குறிப்பிடபட்டிருந்ததா என்றால் இல்லை. இந்த காசோலை வழக்கு விவரங்கள் எதிரி தெரிவித்துதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி எவ்வாறு சாட்சியம் அளிக்க வேண்டும் என்று தெரிவித்தாரா என்றால் இல்லை. நான் ஓம் முருகா பைனான்ஸ் நிறுவனத்தின் MD என்றால் சரிதான். எனக்கு முன்பு சாட்சியம் அளித்த நாகராஜ் என்பவரும் ஓம் முருகா பைனான்ஸ்ல் ஒரு பார்ட்னர் என்றால் சரிதான். பொதுவாக ஒரு பங்குதாரர் நிறுவனத்தின் பங்கு தாரர்கள் யார் என்று பதிவுகளை பார்த்தால் கூற இயலும் என்றால் சரிதான்.

2. எனக்கு படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ.1 ஆவணமான register of firms படிவம் அ-வில் யார் யார் பெயர்கள் குறிப்பிடபட்டுள்ளது என்றால் ரேவதி, ராஜா, ஜெயந்தி, வாசு, சத்தியநாதன், சரவணன், அன்பு, நாகராஜன், டி.ராஜா ஆகிய 9 நபர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கூறிய 9 நபர்கள் மட்டுமே லட்சுமி சரசுவதி பைனான்ஸ்ன் பங்குதாரர்கள் என்றால் சரிதான். மேற்படி லட்சுமி சரசுவதி பைனான்ஸ் நிறுவத்தை நாங்கள் 2016 முதல் 2018 வரை மட்டுமே புதுப்பித்துள்ளோம் என்றால் சரிதான். 2018-க்கு பின்பு லட்சுமி சரசுவதி பைனான்ஸ் நிறுவனம் முடிப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக லட்சுமி சரசுவதி பைனான்ஸ் நிறுவனத்திற்கு வரும் வாடிக்கையாளருக்கு பணத்தை நாங்கள் ரொக்கமாக கொடுப்போமா அல்லது காசோலையாக கொடுப்போமா என்றால் ரொக்கமாகதான் கொடுப்போம். எனவே லட்சுமி சரசுவதி பைனான்ஸ் நிறுவனத்தில் காசோலைக்கான வேலை இல்லை என்றால் சரிதான்.

3. ஒரு பங்கு தாரர் 6 காசோலைகள் வீதம் மொத்தம் 54 காசோலைகள் கொடுக்கப்பட்டது என்றால் நான் 6 காசோலைகள் புகார்தாரருக்கு கொடுத்த விவரம் மட்டுமே எனக்கு தெரியும். லட்சுமி சரசுவதி பைனான்ஸ் நிறுவனத்தில் புகார்தாரர் பங்குதாரராக இல்லாத நிலையில் அவருக்கு ஏன் காசோலை கொடுக்கப்பட்டு என்றால் அவரது மனைவியான ரேவதி என்பவர் பங்குதாரராக இருப்பதால் புகார்தாரர் பெயரில் காசோலை வழங்கப்பட்டது. என்னுடைய காசோலையை தான் புகார்தாரரிடம் கொடுத்தேன். நான் புகார்தாரருக்கு வழங்கிய காசோலைகளின் எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரரிடம் நான் கொடுத்த 6 காசோலைகளையும் திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான்.

4. 2018-ம் வருடமே லட்சுமி சரசுவதி பைனான்ஸ் நிறுவனம் முடப்பட்டுவிட்டதால் அதன்பின்னிட்டு அந்நிறுவனத்தில் என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி யாரிடம் பணம் பெற்றார் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி அழைத்து வந்ததின் பெயரில் நான் எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.